பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை 06.08.2023 கதிர் 268

# தனித் தனியே தமிழ்க் கட்சிகள் 13க்கான யோசனை சமர்ப்பிப்பு

## ஒகஸ்ட் 15க்கு முன் அனுப்பத் தயார்ப்படுத்தல்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது தொடர்பான தமது யோசனைகளை கட்சிகள் முன் வைப்பதற்கு ஒகஸ்ட் 15 வரை கால ஜனாதிபதி கால அவகாசம் வழங்கியுள்ள நிலையில் தமிழ்க் கட்சிகள் தமது யோசனைகளைத் தனித் தனியாகவே முன்வைக்கும் என்று தெரியவருகின்றது.

தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் ஏற்கனவே இது தொடர்பான யோசனைகளை ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ள நிலையில் மீண்டும் யோசனைகளை முன்வைக்கமாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனது யோசனைகளை ஜனாதிபதிக்குத் தனியாக அனுப்பி வைக்க இருக்கின்றது. அதற்கான தயார்ப்படுத்தல்களை அந்தக் கட்சி தொடங்கியுள்ளது.

13ஆவது திருத்தமும் மாகாண சபைகளும் பொருத்தமற்றவை என்று நிராகரிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யோசனைகள் எதனையும் முன்வைக்காது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித் தனியாக யோசனைகளைச் சமர்ப்பிப்பதா அல்லது ஒன்றாக இணைந்து சமர்ப்பிப்பதா

☞2

## இனி இது ரகசியம் அல்ல!

இந்த ஒகஸ்ட் மாதம் அரசியலைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது. அரசமைப்பின்படி இதிலிருந்து சரியாக ஒரு வருட காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு விடுக்கப்படவேண்டும். மற்றைய எல்லாத் தேர்தல்களையும் பின்தள்ளிவிட்டு ஜனாதிபதித் தேர்தலையே முதலில் வைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முழு மனதோடு இருக்கும் நிலையில் இந்த ஒகஸ்ட் மாதம் மிக முக்கியமானது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என்பதில் ஜனாதிபதி மிக உறுதியாக உள்ளார். எனினும் அதனை ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதா அல்லது மார்ச் மாதத்தில் நடத்துவதா என்பதுதான் கேள்வி. ஜனாதிபதியின் உறவினர்கள் சிலர் அவரது ஜாதகத்தை எடுத்துச் சென்று சோதிடர்களிடம் காட்டியபோது அடுத்த வருடம் மார்ச் மசாதத்திற்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டால் மட்டுமே வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக இருக்கும் என்று தேரிவித்துள்ளரன். பிந்தினால் வெற்றி வாய்ப்பு மங்கத் தொடங்கும் அல்லது தோல்வி வாய்ப்பு அதிகம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பொதுவாகவே இலங்கைத் தேர்தலுக்கும் சோதிடர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சோதிடர்கள் கணித்துக் கொடுத்தபடியே பல ஜனாதிபதித் தேர்தல்கள் அவை நடக்கவேண்டிய காலத்திற்கு முன்பே நடந்துள்ளன அல்லது பின்தள்ளப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விதிவில்க்கல்ல என்றே தெரிகின்றது. அதனால் மார்ச் மாதத்திற்கு முன்னதாகத் தேர்தலை நடத்தும் சாத்தியங்களைப் புறந்தள்ளிவிட முடியாது.

எந்த மாதத்தில் நடத்தினாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகத் தான் போட்டியிட்டால் தோல்வி நிச்சயம் ;என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும். அதனால் புதிய முன்னணி ஒன்றைத் தோற்றுவித்து அதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவர் திட்டமிட்டுள்ளார் என்கின்றன

☞2

# சங்கமித்தை வரவும் இல்லை அரச மரம் நாட்டவும் இல்லை

## சங்கானையில் போராட்டம்



பறாளைமுருகன் ஆலயத்திலுள்ள அரசமரம் தொல்லியல் அடையாளமாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தகமானிக்கு எதிராகவும் தமிழர் பகுதியில் தொல்லியற் திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் சங்கானை பஸ் நிலையத்திற்கு எதிரே நேற்று (சனிக்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

'இதன் போது சங்கமித்தை வரவும் இல்லை, அரசமரம் நடவும் இல்லை' உள்ளிட்ட பல்வேறு

☞2

# காலநிலை பேரிடர்களுக்கு ஈடுகொடுக்கும் கட்டட நிர்மாணம் இலங்கைக்கு அவசியம்

## கட்டடக் கலைஞர்கள் சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி உரை

எதிர்கால காலநிலைப் பேரிடர்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உகந்தான கட்டட நிர்மாணங்கள் இலங்கைக்கு அவசியப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

கொழும்பு சினமன் கிராண்ட ஹோட்டலில் நேற்று நடைபெற்ற கட்டடக் கலைஞர்களின் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'கட்டிக்கலை : நிலைப்புக்கானதாக்கம்' என்ற தொனிப் பொருளின் கீழ், பிரித்தானிய கட்டடக்கலைஞர்களின் றோயல் நிறுவனம் (ஆர்.ஐ.பி.ஏ) இலங்கையின் அமெரிக்க வாஸ்த்துசாஸ்த்திர நிறுவனம் (ஏஐஏ) இலங்கைக்கான இத்தாலி தூதரகம் ஆகியன இணைந்து மேற்படி சர்வதேச மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்ததோடு, இலங்கையர்கள் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய கட்டக்கலைஞர்கள் என 350க்கும் மேற்பட்டவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவித்ததாவது;

இலங்கையின் கட்டடக் கலைஞர்களால் பலவருடங்கள் நிலைக்கக்கூடிய நிர்மாணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை கட்டடக்கலை வரலாற்றினை

☞2

# விவசாயமா – மின்சாரமா பிரச்சினையை தீர்க்க மின் உற்பத்தியை அதிகரியுங்கள்

## நாமல் சொல்லும் யோசனையே இது

நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயத்துக்கும் மின்சார விநியோகத்துக்குமிடையில் தற்பொழுது பெரும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஒரேவழிதான் உள்ளது. நாட்டின் மின்சாரக் கட்டமைப்பில் புதிய மின் உற்பத்தியை உள்ளீர்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறில்லாது விட்

☞2

# சுய பொருளாதாரத் திட்டங்களை அறிவிக்க இந்த ஆட்சி தயாரில்லை

## சிறிதரன் எம்.பி. சாடல்

மக்கள் தமது சுய பொருளாதரத்தைக் கட்டி எழுப்புகின்ற திட்டங்களை அறிவிப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடுமையான வறட்சி ஏற்

☞2

## பறளாய் முருகன் ஆலய அரச மரம்:

# பல்கலை மாணவர்கள் சுழிபுரத்தில் போராட்டம்



யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சுழிபுரத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணம்-சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடபட்டட அரச வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் எனத் தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து சுழிபுரம் சந்தியில் இருந்து பாறளை முருகன் ஆலயம் நோக்கி பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது தொல்லியல்

☞2

# மூதூர் படுகொலைகள் நினைவாக பிரான்ஸ் நாட்டில் நினைவேந்தல்



மூதூரில் படுகொலை செய்யப்பட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 17 பணியாளர்களை நினைவு கூரும் 17வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரான்ஸ், கிளிச்சயில் இடம்பெற்றது.

அங்குள்ள பூங்காவில் எழுப்பப்பட்டுள்ள, உயிர்நீத்த பணியாளர்களின் நினைவுத் தூபிக்கு முன்பாக இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. நேற்று வெள்ளிக்கிழமை (04) காலை 11 மணிக்கு பிரான்ஸ், கிளிச்சி பகுதியில் அமைந்

☞2

# மின்சார கட்டண அதிகரிப்புக்கு ஆணைக்குழு அனுமதி மறுப்பு

நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமளிக்க முடியாது. அதனால் மின் கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்கமுடியாது இலங்கை மின்சார சபைக்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்ட நிலையில் அக்காரணிகளையும் தரவுகளின் அடிப்படையில் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்

☞2

## முல்லைத்தீவு மாவட்டம்

# தண்ணிமுறிப்புக் குளத்தில் அத்துமீறி மீன்பிடித்த சிங்கள மீனவர்களால் நேற்று அங்கு கடும் பதற்றம்

## 29 பேரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர் தமிழ் மீனவர்கள்

ந.லோகதயாளன்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடி சங்கங்களினதும் அரசினதும் அனுமதி இன்றி மீன்பிடித்த 29 பேர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.. இவர்கள் அனைவரும் மாணலாறு (வெலிஓயா) பகுதியில் குடியேறியுள்ள சிங்களவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தண்ணிமுறிப்பு குளத்தில் இவ்வாறு அனுமதியின்றி மீன்பிடியில் ஈடுபட்ட சிங்களவர்களால் அங்கு ஒரு முறுகல் நிலை ஏற்பட்டது. தமிழ் - சிங்கள மீனவர்கள் மத்தியில் மோதல் ஏற்படும் சூழல் நிலவியதால் பதற்றம் ஏற்பட்டது. தண்ணிமுறிப்பு மற்றும் கிக்கிறாபுரம் மீனவர் சங்கங்களிற்கு தெரியாது, அவற்றிடம் அனுமதி பெறாது சிங்களவர்கள் குளத்தில் மீன் பிடிக்க முயன்றதே இந்தப் பதற்றத்திற்குக் காரணம்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட தண்ணிமுறிப்பு மக்களுக்கும், கிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து வரும் சிங்களவர்கள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவர்களின் இவ்வாறான நடவடிக்கையினால் குளத்தில் உள்ள மீன்வளங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில்

☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

முக்கியமாக பொது ஜன பெரமுன (மொட்டுக் கட்சி) மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியனவற்றை உடைத்து அவற்றில் ஒரு பகுதியினரை இந்தப் புதிய கூட்டணிக்குள் உள்வாங்குவதற்கான திட்டத்தை அவர் வகுத்துவைத்துள்ளார். இதற்கான வேலைத் திட்டங்கள் வரையப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புதிய முன்னணியின் சார்பில் தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி பெறுவது நிச்சயம் என்று அவர் கருதுகின்றனர்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முக்கிய சூத்திரதாரியாக ரணில் தேர்ந்தெடுத்திருப்பது மொட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸாவை. ஜனாதிபதி செயலகத்தில் அவருக்கு ஒரு அறை தனியாக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் போக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டு பின்னர் அவர் வேண்டாம் என்று நிராகரித்த வீடும் நிமல்லன்ஸாவின் பாவனையிலேயே உள்ளது. அது தவிர புதிய கூட்டணிக்கான அலுவலகம் ஒன்றையும் லன்ஸா அண்மையில் திறந்து நடத்துகின்றார்.

மட்டுமல்ல, மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், மற்றும் கட்சியின் கிராமமட்ட அமைப்பாளர்கள் ஆகியோரைத் தொடர்புகொண்டு புதிய கூட்டணி தொடர்பில் தெரிவிக்கும் லன்ஸா, அவர்களைத் தன் வசப்படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றாராம். இதுவரையில் அப்படி 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னோடு புதிய கூட்டணியில் இணைவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் மொட்டுக் கட்சி அமைப்பாளரும் சக்தி வாய்ந்த மனிதருமான பஸில் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது இடத்திலேயே சென்று இரகசியமாக நடத்திய சந்திப்பின்போது இந்த விவகாரம் குறித்தும் பேசியிருந்தார். ஜனாதிபதி செயலகத்தில் லன்ஸாவிற்கு அறை ஒதுக்கப்பட்டிருப்பது கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் சிரித்துக்கொண்டே அதனைக் கேட்ட ரணில் எந்தப் பதிலையும் அவருக்கு வழங்கவில்லையாம்.

இதுதொடர்பில் இன்னும் பல சுவாரஸியமான விடயங்கள் இருக்கின்றன. நாளை அவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன் வாகசர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காலநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கும்போது பெருமை மிக்க சின்னங்கள் பல எமக்கு இருக்கின்றன. ருவன்வெலிசாய, அபயகிரிய, ஜேதவனாராமய உள்ளிட்ட நிர்மாணங்கள் இலங்கையை உலக அரங்கிற்கு கொண்டுச் சென்ற நிர்மாணங்களாகும்.

சிகிரியா இந்நாட்டின் பிரமிக்கத்தக்க அதேபோல் வாஸ்துசாஸ்திரத்திற்கு அமைவான நிர்மாணமாகும். பொலன்னறுவையில் காணப்படும் பிரமிக்கத்தக்க நிர்மாணங்களும் 2000 வருட வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்டவையாகும்.

அதேபோல், 19ஆம் நூற்றாண்டின், கண்டிதிரித்துவக்கல்லூரி ஷெபல் அரங்கம், களனிவிகாரை, லேக்ஹவுஸ் கட்டடம், பேராதனைப் பல்கலைக்கழகம், சுதந்திர சதுக்கம், ஜெப்ரி பாவா நிர்மாணித்த இலங்கை நாடாளுமன்றம் ஆகியனவும் இலங்கையின் பிரம்மிக்கதக்க படைப்புக்களின் சிலவாக விளங்குகின்றன.

கடந்த இருவருடங்களில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் கட்டட நிர்மாணத்துறையும் பாதிப்புக்களை எதிர்கொண்டது. நிர்மாணத்துறையில் ஆயிரக்கணக்கானோர் தொழிலை இழந்தனர். சரியான நகர திட்டமிடல்கள் ஊடாக அனைத்து நகரங்களையும் அழகிய நகரங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அதற்கான புதிய சட்டமொன்றும் உருவாக்கப்படவுள்ளது. அந்த நகர திட்டமிலுக்குக் குறைந்தபட்சம் 10,000 பொறியியலாளர்கள் அவசியப்படுவர். அதேபோல் கட்டடக் கலைஞர்களும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களும் அவசியப்படுவர்.

கண்டி நகரத்தில் சிறந்த நகர திட்டமிடல் ஒன்றை மீண்டும் முன்னெடுப்பதற்காக ஜப்பான் அரசுடன் பேச்சு நடத்தவுள்ளோம். அந்த நகரதிட்டமிடலை பேராதனை வரையில் விரிவுபடுத்த வேண்டும். அதேபோல் இன்னும் பல நகரங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. அந்த அனைத்து சவால்களையும் ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாராகுங்கள்.

மேலும், காலநிலை இடர்களை வெற்றிக் கொள்ளும் இலக்குகளுக்கு முகம்கொடுக்க இலங்கை தயாராக உள்ளது. 2016 ஆம் ஆண்டில் அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு அதற்கான அர்ப்பணிப்புக்களை செய்தோம்.

காலநிலை அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பிலான நிகழ்ச்சி நிரலை துரிதப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் உறுப்பு நாடுகளிடத்தில் கோரிக்கை விடுத்தார். இன்று ஐரோப்பாவில் பெரும் காட்டுத் தீ பரவியுள்ளது. அதனால் 2050 முன்னதாக அந்தச் சவாலை வெற்றிகொள்ள அது தொடர்பிலான ஆய்வுகளைத் தொடங்கியுள்ளனர்.

அதேபோல் கட்டடக் கலைஞர்களும் காலநிலை அனர்த்தம் தொடர்பிலான நியதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். எதிர்கால காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உகந்த நிர்மாணிப்புக்களை வடிவமைக்க வேண்டும். அது தொடர்பில் உரிய தரத்தை உருவாக்கும் பொறுப்பும் உங்களை சார்ந்துள்ளது.

இந்நாட்டில் நிர்மாணிக்கப்படவிருக்கும் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பிலான பல்கலைக்கழகத்தில் உள்ளடக்க வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாம் அறிந்துக்கொண்டுள்ளோம்.

அண்மைய காலங்களில் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணங்களை 1000 - 2000 வருடங்கள் வரையில் பாதுகாக்கமுடியாது. எனவே முன்னைய காலங்களில் நாட்டின் கட்டடக்கலைக்கு கிடைத்திருந்த அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.' எனத் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க பிரதி தூதுவர் டக்லஸ் சொனெக், பிரித்தானியாவுக்கான பதில் உயர்ஸ்தானிகர் லீசா வொன்ஸ்டோல் உள்ளிட்ட பலரும் இந்நிகழ் வில் கலந்துகொண்டிருந்தனர்.

## சங்கமித்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் பொது மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (05)

## தனித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது தொடர்பில் சூம் செயலி மூலமான கலந்துரையாடல் ஒன்றுக்கு இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பின்னரே முன்மொழிவுகளை எப்படிச் சமர்ப்பிப்பது என்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று தெரிகின்றது.

அதேபோன்று ஆளும் பங்காளிக் கட்சியான ஈபிடிபியும் தனியான யோசனை வரைவு ஒன்றை முன்வைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளையும் போராட்டகாரர்கள் தாங்கியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மத குருமார்கள், சைவ அமைப்புக்கள், சிவில் அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## தண்ணிமுறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட சிங்கள மொழிபேசும் மீனவர்களை மடக்கிப் பிடித் தண்ணிமுறிக்குப் குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள், அவர்களைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். எனினும் அத்துமீறி மீன் பிடித்த பல சிங்களவர்கள் தப்பி ஒடி ஒளித்துவிட்டனர்.

தமிழ் மீனவர்களால் பிடிக்கப்பட்டவர்களில் 29 சிங்கள மீனவர்ளுடன் அவர்கள் கொண்டுவந்த 6 வலைகள், 20 மிதக்கும் ரியூப்களும் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுவருகின்றனர்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் வெலிஓயா சிங்கள மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையினால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுவருவதாக பல தடவைகள் அரச திணைக்களத்திடம் எடுத்துரைத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நேற்றையதினம் அத்துமீறிய மீனவர்களை பிடித்த தமிழ் மீனவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

## சுய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, உடவளவு நீர்த்தேக்கத்தில் விவசாயி களுக்கான தண்ணீர் வெட் டப்பட்டு இருப்பதால் தென் பகுதியில் இருக்கின்ற சிங்கள விவசாயிகள் போராட்டங்களை முன்னெடுத்து இருப்பதாக நாங்கள் செய்திகளில் காண்கின்றோம்.

நான் நினைக்கின்றேன் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருப்பது பயிர்ச்செய்கையும், விவசாயிகளும்தான். இவர்கள் பாதிக்கப்படுகின்ற பொழுது இந்தநாட்டினுடைய பெரு வருமானம் அடியோடு பிடுங்கப்படுவதற்கான சாத்தியம் நிறையவே உண்டு,

இந்தப் பிரச்சினையின் தார்ப்பரியத்தைப் புரிந்து கொண்டு அதற்குத் தீர்வு காண்பதற்கான ஓர் அடிப்படைத் திட்டத்தை ஆட்சியாளர்கள் சரியான முறையில் கொண்டு வரவில்லை,

வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்குவது அல்லது இறக்குமதிசெய்வது, சுற்றுலா பயணிகள் வந்து காசு தந்தால் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வது என்ற எண்ணத்தில்தான் ஆட்சியாளர்கள் இருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்குள்ளயே சுயமான உற்பத்திகளையோ, அல்லது தொழில் உற்பத்திகளையோ, வாழுகின்ற மக்களுடைய சுய பொருளாதரத்தை கட்டி எழுப்புகின்ற திட்டங்களையோ ஆட்சியாளர்கள் அறிவிப்பதற்குத் தயாராக இல்லை,

இதனால் இந்த ஆட்சியினுடைய பொருளாதாரத் திட்டம் தோல்வி கண்டிருக்கிறது. இலங்கை முதலில் தன்னுடைய நிரந்தரமான பொருளாதாரத் திட்டத்தை சரியான முறையில் வகுக்கத் தவறினால் இன்னும் தொடர்ந்து இதே வறுமை நிலையும், பொருளாதார இடைஞ்சலையும் எதிர்கொள்ள நேரிடும் - என்றார்.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரித்துள்ளார்.

நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமளிப்பது தமது ஆணைக்குழுவின் பொறுப்பல்ல என்பதன் காரணமாக மின் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க முடியாது.

அத்துடன், மின்சாரக் கட்டணத் திருத்தம் வருடத்திற்கு இரண்டு முறை மாத்திரம், அதாவது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும்

அதனடிப்படையில் இந்த வருடம் மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட முடியாதென ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

முன்னதாக நட்டத்தினை ஈடுசெய்யும் வகையில் மின் கட்டணத்தை மீண்டும் உடனடியாக அதிகரிக்க வேண்டும் என மின்சார சபை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்சார சபையின் பொது முகாமையாளர் கடிதம் ஊடாக இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது: மின் கட்டணத்தை அதிகரிக்காத நிலையில், இந்த ஆண்டின் அடுத்த சில மாதங்களில் செலவுகளை ஈடுகட்ட முடியாமல் போகும் நிலை ஏற்படவுள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை முன்மொழிந்தபோதும், மின்கட்டண குறைப்பு மற்றும் பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் காரணமாக இந்த வருடம் மின்சார சபையின் வருமானம் சுமார் 3,300 கோடி ரூபாவால் குறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையினை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடம் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட போது 4,500 ஜிகாவோட் நீர் மின்சாரம் பெறப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வறட்சியான காலநிலை காரணமாக 1,738 ஜிகாவோட் மின்சாரத்தையே பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

வறட்சி நிலை காரணமாக எதிர்காலத்தில் அனல் மின் உற்பத்தி மேலும் அதிகரிக்கலாம், இவ்வாறான நிலையில் சபையின் செலவினங்களை ஈடுசெய்வது பெரும் பிரச்சினையாகும் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## விவசாயமா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டால் மின்துண்டிப்பைத் தடைசெய்ய முடியாது.

அதேபோன்று விவசாயிகளினுடைய நெருக்கடிக்கும் தீர்வு வழங்க முடியாது. இலங்கை வரலாற்றில் தென்னிலங்கையில் தொடர்ச்சியான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை மஹிந்த ராஜபக்ஷவே முன்னெடுத்திருந்தார். அதன் பின்னர் மேலதிக தேவைகளை மையப்படுத்தி எந்தவிதமான முன்னெடுப்புகளும் நடைபெறவில்லை. இதனால்தான் தற்போதைய சூழல் ஏற்பட்டுள்ளது.

தற்போது அரசியல் மேடைகளில் விவசாயமா தண்ணீரா என்ற பிரச்சினை தான் பேசப்படுகிறது. மேடைப்பேச்சுக்கு அது பொருத்தமாக இருக்கும். வாக்கு அரசியலுக்கும் அது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் யதார்த்தத்தில் அவ்விதமாக செயற்பட முடியாது.

இந்த பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினை வழங்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் நிச்சயமாக நாம் ஆதரவளிப்போம் - என்றார்.

## மூதூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள உயிர்நீத்த பணியாளர்களின் நினைவுத் தூபிக்கு முன்னால் இடம் பெற்றது.

இந்த நினைவுகூரல் நிகழ்வு கிளிச்சி, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்ஸ் கிளிச்சி பிராங்கோ தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

நினைவுகூரலின் தொடக்கத்தில் கிளிச்சி பிராங்கோ தமிழ்ச்சங்க பொருளாளர் கண்ணதாசன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனையடுத்து, உயிரிழந்த விடுதலைப்புலிகள் இயக்க போராளியின் சகோதரி ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்

பின்னர், நினைவுத் தூபிக்கு கிளிச்சி தமிழ்ச் சோலை நிர்வாகி சுபத்திரா ரவிச்சந்திரன் மலர் தூவி அக வணக்கம் செலுத்த, தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட ஏனைய கட்டமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், கிளிச்சி தமிழ்ச்சோலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் மரியாதை செலுத்தினர்.

அதன் பின்னர், கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கத் தலைவர் க.சச்சிதானந்தம், பிரெஞ்சு மொழியில் கிளிச்சி தமிழ்ச்சோலை மாணவி ரபிசாரவிச்சந்திரன் ஆகியோர் உயிரிழந்த 17 பணியாளர்கள் தொடர்பில் நினைவுரை ஆற்றினர்.

# சமனல நீர்த் தேக்கம் முன் விவசாயிகள் போராட்டம்

## பயிர்களுக்குத் தண்ணீர் கேட்டு

தெற்கில் பயிர்களுக்குத் தண்ணீர் கேட்டு விவசாயிகள் நடத்திவரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. சமனல நீர்த் தேக்கத்தின் அணைக் கதவுகளுக்கு முன்பாகக் கூடிய விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடனடியாகத் தமது பயிர்களுக்குத் தேவையான தண்ணீரைத் திறந்து விடும்படி அவர்கள் வலியுறுத்தினார்கள்.

உடவளவ விவசாயிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். கடும் வெப்பத்தால் கருகிவரும் தமது பயிர்களுக்குத் தண்ணீரைத் திறந்துவிடும்படி விவசாயிகள் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் விவசாயிகளுக்குத் தண்ணீரைத்திறந்துவிட்டால், நீர்மின் உற்பத்தியை அது பாதிக்கும் என்று கூறும் ஆளும் தரப்பினர், நீர்த் தேக்கத்தில் இருக்கும் தண்ணிர் சில நாள்களுக்கு மட்டுமே விவசாய நிலங்களுக்குப் போதுமானதாக இருக்காது என்றும் விளக்கம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, விவசாயிகளுக்கு நீரை வழங்குவது தொடர்பான விடயத்தில் ஜனாதிபதிறை தவறாக வழி நடத்துவதாக அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் விவசாயிகளுக்காக குரல் எழுப்புவதற்காக பதவி விலகும் நிலை ஏற்படுமாயின் அதற்கு முகம்கொடுத்த தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலனறுவையில்; நேற்றைய செய்திளார்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது,

விவசாயிகளுக்கு நீர் வழங்குவது சம்பந்தமாக கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. குறிப்பாக உடவளவ விவசாயிகளின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கபடுகிறது. இந்த விடயத்தில் நான் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து நீர் வழங்க வேண்டும் என்பதிலேயே உறுதியாக உள்ளேன்.

இலங்கையுடைய நீர் வழங்கல் சம்பந்தமான கொள்கை அடிப்படையில் முதலில் குடிநீர் வழங்க வேண்டும் இரண்டாவதாக விவசாயத்துக்கு வழங்க வேண்டும் மூன்றாவதாகத் தான் மின்சாரம் அல்து இதர விடயங்களுக்கு நீர் வழங்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் தற்போது விவசாயிகளின் நெருக்கடியை போக்கும் வகையில் நீரை வழங்குவது பொருத்தமானதாகும்.

இதேபோல மின்சார தடை ஏற்படுமாக இருந்தால் அதற்கான மாற்று வழிகளை கண்டறிய வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதியைத் தவறாக வழிநடத்துகிறார்கள்.

இவ்வாறு விவசாயிகள் விடயத்தில் பிழையாக தீர்மானங்களை எடுத்து முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு இடமளிக்கப்போவதும் இல்லை. அவ்வாறான நிலைமை நீடிக்கின்ற பட்சத்தில் அரசாங்கம் சீர்குலையும் நிலை ஏற்படும்.

அதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது அதேநேரம் நான் விவசாயியின் புதல்வர் என்ற வகையில் விவசாயத்துக்கு நீர் வழங்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்த விதமான மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. அதற்காக குரல் எழுப்பி எனது பதவியை துறப்பதற்குக்கூட தயாராக உள்ளேன் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதாம்

அஸ்வெசும' சமூக நலன்புரித் திட்டமானது சமுர்த்தி வேலைத்திட்டத்தையோ அல்லது சமுர்த்தி வங்கிகளையோ இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் அல்ல என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, அஸ்வெசும சமூக நலன்புரித்திட்டத்தில் 20 லட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவை பரீட்சிக்கப்பட்டு அதில் தற்போது 17 லட்சத்து 92 ஆயிரத்து 265 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பெயர்பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் 10 லட்சத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகளும், சுமார் 120,000 ஆட்சேபனைகளும் கிடைத்துள்ளன என சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், அவை தொடர்பான பரிசீலனைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கூறினார்.

முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்பட்டது போல் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் முன் வைக்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு அஸ்வெசும வேலைத் திட்டத்தின் ஊடாக எவரும் கைவிடப்படாத வகையிலேயே இந்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அஸ்வெசும சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தற்போது பிரதேச செயலாளர்களின் தலைமையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணியை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (05)

# முல்லை மாவட்ட பஸ் நிலையத்தை இயங்கவைப்பதில் இழுபறி நிலைமை!

## மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் விவாதம்



முல்லைத்தீவு பஸ் நிலையத்தை இயங்க வைப்பதில் பல வருடங்களாக இழுபறி நிலை காணப்பட்டு வருகின்றது.

அதனை, இயங்க வைப்பதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என கூறி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பல்வேறு தரப்பினருடன் நீண்ட நேர விவாதம் இடம்பெற்றிருந்தது. முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.ஜசிந்தன் தெரிவிக்கையில் -

தனியார் பஸ் சங்கத்தால் கூறப்பட்ட ஏற்பாடுகள் பிரதேச சபையால் 100 வீதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது வேறுவிதமான பிரச்சினையைக் கூறுகிறார்கள்.

முள்ளிவாய்க்காலால் பஸ் வரும் என்றால் பஸ் நிலையத்தில் பஸ் செல்வதற்கு எந்த இடையூறும் இல்லை. போன மாதம் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

இன்று வேறு பிரச்சினையைக் கூறுவதாக இருந்தால் நாங்கள் நிதியை வீண்விரயம் செய்திருக்கிறோம் எனத் தெரிவித்தார். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கூறுகையில் -

நீங்கள் முரண்பட்டது சரி. ஏனைய மாவட்ட பஸ் நிலையங்களுடன் ஒப்பிடும் போது இது பஸ் தரிப்பிடம் போலவே இருக்கிறது. மாவட்ட பஸ் நிலையம் போல் இல்லை எனத் தெரிவித்தார் .

தனியார் பஸ் சங்கத்தினர் கருத்து தெரிவிக்கையில், பாதுகாப்பற்ற பஸ் நிலையத்திற்குச் செல்ல நாங்கள் தயாராகவில்லை என்றனர்.

இ.போ.ச கருத்து தெரிவிக்கையில், இணைந்த நேர அட்டவணையை வழங்கினால் நாங்கள் அங்கு சென்று சேவையில் ஈடுபட முடியும் எனத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவிக்கையில், பேரம்பேசி ஒரு வேலையை செய்ய முடியாது என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில், பஸ் ஓடுவதற்கான ஆரம்ப வேலைகளை முடித்துக் கொண்டு பின்னர் அங்கு சென்றதன் பின்னர் இணைந்த நேர அட்டவணையின்படி செயற்படலாம் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் தெரிவிக்கையில், பிரதேச சபையில் வளங்கள் குறைவு. அதனை பயன்படுத்தி அவர்கள் வேலைகளை செய்திருக்கின்றார்கள்.

ஏற்கனவே இவ்வாறு போக முடியாது என கூறியிருந்தால் நான்கு, ஐந்து வீதியையாவது போட்டிருப்பார்கள். யுத்த காலத்தில் காபெட் போட்டு பஸ் ஓடவில்லை.

இது மக்களுக்கான சேவை. எல்லோரும் மனச்சாட்சிபடி இருக்கிறதை சமாளித்து நடவுங்கள். எதிர்கால வேலைத்திட்டங்களை மேற்கொண்டு தருவோம். - என்றார்.

அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் கூறுகையில், பஸ் நிலைய பகுதியில் அமைக்கப்பட்ட 16 இற்கும் மேற்பட்ட மின்விசிறிகள், மின்குமிழ்கள் களவாடப்பட்டிருக்கின்றன. அரச சொத்து இவ்வாறான நிலையில் உள்ளது எனத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் மஸ்தான் தெரிவிக்கையில் -

குறிப்பிட்ட வேலைகளை செய்து முடித்ததன் பின்னர் வவுனியாவைப்போல் பஸ் நிலையம் தான் தேவை, அவ்வாறு செய்து தந்தால் தான் போவோம் என்றால் அது கடினமானதாக இருக்கும். ஏதோ ஒரு முடிவு தான் நாங்கள் எடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் பஸ் நிலையத்தை இயங்க வைக்க கடின முயற்சியுடன் இருக்கின்றார்கள்.

வவுனியாவில் 10 மில்லியன் நிதியில் கட்டிமுடிக்கப்பட்ட பஸ் நிலையத்தை இ.போ.ச, தனியார் பிடிவாதத்தால் வேறு விதமாக தான் இயங்க வைக்கப்பட்டது. இங்கும் அவ்வாறு தான் வருமோ என்று தெரியாமல் இருக்கிறது. அரசாங்க அதிபருடன் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கிறீர்கள். அதனை நாங்கள் செயற்படுத்தி தருகின்றோம். - என்றார். (05)

# மிஹிந்தலை விகாரையின் மின்இணைப்புத் துண்டிப்பு

## விகாரை விகாராதிபதி காட்டம்



மிஹிந்தலை விகாரையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 41 லட்சம் ரூபா மின்சாரப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் மிஹிந்தலைக்கு வருகின்றனர். இங்கு வந்து மலசலக்கூடத்துக்கு செல்ல வேண்டாம். நீரில்லை. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரவில் வரவேண்டாம். நாட்டின் ஆட்சியாளர்கள் மகாநாயக்க தேரர்களிடம் சென்று புத்தசாசனத்தை நிலைநிறுத்துவதாகக் கூறுகின்றமை பாரிய பொய்யாகும் என மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவா ஹெங்குனுவெவேதம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை விகாரையில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு - அன்றைய காலத்தில் நமது அரசர்கள் இந்த விகாரையை பாதுகாக்க தமது உயிர்களையும் தியாகம் செய்துள்ளனர். இந்த விகாரை பாதுகாக்கப்பட வேண்டுமென இங்குள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் சுதந்திரத்துக்கு பின்னர் 79 ஆம் ஆண்டு மிஹிந்தலை விகாரைக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது.

இன்றும் லட்சக்கான மக்கள் வழிபடுவதற்காக இரவு, பகல் என வருகை தருகின்றனர். கடந்த பூரணை தினத்தில் உலக மக்கள் காட் டிய அக்கறையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இருப்பினும் இன்று மிகிந்தலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. 41 லட்சம் ரூபா மின்சாரப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் மிஹிந்தலை வருகின்றனர். இங்கு வந்து மலசலகூடத்துக்கு செல்ல வேண்டாம். நீரில்லை. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இரவில் வரவேண்டாம். இங்கு பாம்புகள், விபாம்புகள் உள்ளன. நகரத்துக்கு அடியில் இருந்து நுனி வரையில் வெளிச்சம் கிடைக்கும். அதனை அவர்களால் பார்க்க முடியாது. அரசாங்கம் ஒவ்வொரு துறைகளையும் தனியாருக்கு விற்பனை செய்கிறது. நாட்டின் ஆட்சியாளர்கள் மகாநாயக்க தேரர்களிடம் சென்று புத்தசாசனத்தை நிலைநிறுத்துவதற்கு பாடுபடுகிறோம் என்கிறார்கள். அது பாரிய பொய்யாகும். என்றார். (05)

# வைத்திய நிபுணர்களுக்கு முல்லையில் பற்றாக்குறை

## சத்தியமூர்த்தி தெரிவிப்பு

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை நிலவுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லாமை ஒரு குறையாக உள்ளது. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கையில் உள்ள வைத்திய நிபுணர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர்.

இறுதியாக நடைபெற்ற கலந்துரையாடலில் இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இரண்டு வைத்தியர்களையாவது நியமிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சுகாதார அமைச்சரும் இருந்தார்.

அதனை நாங்கள் தற்போது தொடர்ந்து கேட்கின்றோம். எதிர்வரும் காலத்தில் நிரந்தர வைத்திய நிபுணர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். விடே ஆளணி எங்களுக்குத் தேவையாக உள்ளது. நிதி அமைச்சு புதிய ஆளணியை நியமிக்காத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. உள்ளகக் கட்டமைப்பிலும் விரைவான அபிவிருத்தி தேவையாகவுள்ளது. அதற்குத் திட்டம் ஏதாவது இருந்தால் மேற்கொள்ள வேண்டும். - இவ்வாறு தெரித்துள்ளார். (05)

# தமிழர் – சிங்களவர்கள் இடையே முரண்பாடுகளை தோற்றுவிக்கவே நீராவியடி பிள்ளையார் ஆக்கிரமிப்பு!

## ரவிகரன் சாடல்

தமிழர், சிங்களவர்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தவே நீராவியடி பிள்ளையார் ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை பழைய செம்மலை நீராவியடி ஆலய உற்சவத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார், பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெற்றுள்ளது. அதிகளவான பக்தர்கள் கூடி வருகைதந்து எம்பெருமானுடைய ஆசீர்வாதத்தை வேண்டி சென்றார்கள்.

இதில், குறிப்பிட்டு சொல்ல வேண்டிய ஒன்று நான் முல்லைத்தீவைச் சேர்ந்தவன் என்பதால் நீராவியடி பிள்ளையார் ஆலயம் என்பது நாங்கள் சிறுவயதில் இருக்கும்போது கூட இந்த வீதியால் கொக்குளாய், கொக்குதொடுவாய் பகுதிக்கு செல்லும் போது நீராவியடி பெரிய ஏற்றம் என நாங்கள் சைக்கிளில் வரும்போது நின்று இந்த பிள்ளையாருக்கு கற்பூரம் கொளுத்திவேண்டுதலைவேண்டி செல்வது வழமை. நாங்கள் மட்டுமல்ல இதனால் செல்லும் மக்களும் அப்படிதான்.

அப்போது இந்த இடத்தில் ஒரு சிங்களவனும் இல்லை, பௌத்தனும் இல்லை ஆனால் மக்கள் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் இந்த இராணுவ முகாம் இங்கே வந்துவிட்டது. இராணுவ முகாம்களை அங்கங்கே அமைத்து இராணுவ முகாம்களின் துணிவுடன் இனவாத பிக்குகள் ஆதிக்கம் செலுத்தியே இங்கு ஆக்கிரமிப்புக்கள் நடந்தது.

புத்தர் சொல்லவில்லை ஆக்கிரமிப்பை செய்யுங்கள் என்னைவீதியிலேகொண்டுபோய் இருத்துங்கள் என. ஆனால் புத்தர் பெயரை சொல்லி இனவாதிகள், இனவாத சிந்தனையுள்ளவர்கள் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டும்என்றுஒன்றும்இல்லாது தனியாக இருந்த பிள்ளையார் இருந்த இடத்தில் புத்தர்சிலையை நிறுவியிருக்கின்றார்கள்.

இங்கு வந்து பார்ப்பவர்களுக்கு தெரியும் எவ்வாறான மோசமான ஆக்கிரமிப்புடன் தான் இங்கு இருக்கிறார்கள். மக்கள் வழிபடக் கூட ஒரு சிறிய இடம் தான் இருக்கின்றது. மக்களின் வழிபாட்டு பாதுகாப்புக்காக ஆலயத்தின் அருகில் கட்டடங்கள் கட்டிவிடலாம் ஆனால் நீதிமன்றின் தீர்ப்புக்கமைய பொறுமையோடு காத்துக் கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் புத்தர் பெயர் சொல்லி இனவாதிகள் தமிழர், சிங்களவர் இடையே பிரச்சினையை ஏற்படுத்த வேண்டும் என்றே இந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். (05)



# சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்த முற்பட்டவர் கைதாகினார்



வண்ணாத்திவில்லு ஆலங்க தோனி கடற்கரைப் பகுதியில் பீடி இலைகளை ஓட்டோவுக்கு ஏற்ற முற்பட்ட ஒருவர் வெள்ளிக்கிழமை அதிகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்துவதற்கு முற்பட்டு வருவதாக வண்ணாதிவில்லு பொலிஸாருக்குக் கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் 16 உறைகளில் 500 கிலோவிற்கும் அதிகளவையுடைய பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும், பீடி இலைகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடத்தலோடு சம்பந்தப்பட்ட கரைத்தீவு பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 50 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியானவை என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள், பீடி இலைகளை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோ ஆகியவற்றையும் புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வண்ணாத்திவில்லு பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முதலில் செய்யவேண்டியது

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆவணி 15 அழைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இம்முறையும் கடந்த தடவையைப் போலவே சில கட்சிகள் கலந்துகொள்ளும் சில புறக்கணிக்கும் என்கிற நிலைதான் இருக்கின்றது. முக்கியமாக ஜேவிபி மக்கள் முன்னணி என்பன கூட்டத்தைப் புறக்கணிப்பதில் உறுதியாக இருக்கின்றன. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கூட்டணி போன்றன, ரணில் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தபோதும் கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்க்க மாட்டா. தமிழ் மக்கள் கூட்டணி ஈபிடிபி போன்றன ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படும்.

இந்த நிலையில் இந்தக் கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கான காரணமாக ஜேவிபி தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்திருக்கும் கருத்து முக்கியமானது. சரியானதும்கூட. இந்த விடயம் தொடர்பில் அதாவது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆளும் தரப்பின் கொள்கை முடிவு என்ன என்பதை முதலில் பகிரங்கப்படுத்தட்டும் அதன் பின்னர் நாம் எமது யோசனைகளை முன்வைக்கின்றோம் என்கிறார் அவர். அது சரியானதுதானே. நாடாளுமன்றத்தில் கிட்டத்தட்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஆளும் தரப்பு 13ஐ நடைமுறைப்படுத்த மட்டும் எதிர்க் கட்சிகளின் ஆதரவைக் கோருவது எதற்கான உத்தி? என்று அவர் கேள்வி எழுப்புவதில் நியாயம் உண்டு.

”ஆளும் தரப்பு இந்த விடயத்தில் என்ன நிலைபாட்டை கொண்டிருக்கின்றது என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆளும்தரப்புக்குள் இந்த விடயம் சம்பந்தமாக முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன. அது பகிரங்கமான விடயம். அவ்வாறிருக்கையில் எதிர்க் கட்சிகளிடமே ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் கடன்மறு சீரமைப்பு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற விவகாரங்களில் ஆளும் தரப்பாலேயே தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சிகளிடம் கருத்துக்களைக் கோரவில்லை.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் மாத்திரம் எதற்காக ஆளும் தரப்பின் முடிவை அறிவிக்காது எதிர்கட்சிகளின் நிலைப்பாட்டை கோருகின்றார் என்பதே இங்குள்ள முக்கிய கேள்வியாகும். எம்மை பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக ஆளும் தரப்புத் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்ற பொழுது நாம் எமது பரிந்துரைகளையும் கருத்துகளையும் முன்வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அதனை விடுத்து ஜனாதிபதியின் ஏமாற்று நாடகங்களுக்கு நாம் துணை போகப் போவதில்லை”' – என்று அனுரகுமர தெரிவித்திருக்கிறார்.

அவரது சரியான, பொருத்தமான கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது ஆளும் தரப்பினதும் அரசுத் தலைவரதும் பொறுப்பு. ஆனால், அது ஒருபோதும் நடக்காது. ஏனெனில் ரணில் நடத்தும் ஏமாற்று நாடகத்தில் இதுபோன்று உண்மைகளை வெளிப்படுத்திவிட்டால் பின்னர் நாடகத்திற்கு ஏது வேலை. .

இந்த விடயத்தில் ஆளும் தரப்பின் நிலைப்பாடு என்ன, எதனை வழங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்கள், எதனை வழங்குவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பதை அறிவித்துவிட்டுத்தான் இது தொடர்பான மற்றைய நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். அப்போதுதான் இது ஒரு நேர்மையான, சாத்தியமான முயற்சியாக இருக்க முடியும். 2015ஆம் ஆண்டும் இதுபோன்றுதான் ஆளும் தரப்புக்குள் முரண்பாடுகளை வைத்துக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சி கடைசியில் பிசுபிசுத்துப் போய்விட்டது. தற்போது 13ஐ நடைமுறைப்படுத்தும் விடயத்திற்கும் அதுபோன்றதொரு நிலை ஏற்படமாலிருக்கவேண்டுமாயின் ஆளும் தரப்பு முதலில் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்து விட்டே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.



# பிரான்ஸ் அதிபரின் வருகை வெளிப்படுத்திய உண்மை

**உப்புல் ஜோசப் பெர்னாண்டோ**

திருகோணமலையைக் கட்டுப்படுத்துபவர் இந்தியப் பெருங்கடலைக் கட்டுப்படுத்துகிறார் என்று 18 ஆம் நூற்றாண்டில் பேரரசர் நெப்போலியன் அறிவித்தார்.

1782இல், பேரரசர் நெப்போலியன் திருகோணமலை துறைமுகத்தை கைப்பற்ற ஒரு பிரெஞ்சுப் படையை அனுப்பினார். ஆனால் அது தோல்வியடைந்தது.

பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகை தந்தபோதிலும், அவர் திருகோணமலையை குறிவைத்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. அவர் இலங்கைக்கு வருவதற்கு முன்னும் பின்னும் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் பிரெஞ்சு சக்தியைப் பற்றியும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை ஏன் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான புவிசார் அரசியல் மோதல்களமாக மாற்றக்கூடாது என்றும் பேசியிருந்தார்.

மக்ரோன் பப்புவா நியூகினியா உட்பட பல நாடுகளுக்கு பயணம் செய்த பின்னர் இலங்கைக்கு வந்தார். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள அந்த நாடுகளுக்கு பிரான்ஸ் அதிபர் ஒருவர் செல்வது இதுவே முதன்முறை. இது அந்த நாடுகளால் வரலாற்று சிறப்புமிக்க பயணம் என்று அழைக்கப்பட்டது. பிரான்ஸ் ஜனாதிபதியின் இந்தப் பயணம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் என இலங்கை ஜனாதிபதி செயலகமும் குறிப்பிட்டுள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு வந்து அரசுப் பிரதிநிதிகளைச் சந்திப்பார் என வெளிநாட்டு ஊடகங்கள் நினைத்திருந்தன. ஆனால் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்திலேயே தங்கியிருந்தார். அங்கு சென்று ரணில் அவரைச் சந்தித்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதி இலங்கையில் தங்கியிருந்தது அவர் தனது சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்காக நட்பு நாடுகளை தேடுவதையே காட்டியது. ஆனால், அவரது வருகையை வரலாற்றில் முதல் தடவையாக பிரான்ஸ் அதிபரை இலங்கைக்கு அழைத்து வருவதில் வெற்றி பெற்றதாக ஜனாதிபதி ரணில் இலங்கைக்கு காட்ட முயன்றார், தன்னால்தான் பிரான்ஸ் ஜனாதிபதிக்கு இலங்கை மீது தனி அக்கறை உள்ளது என்றும் அவர் காட்ட முயன்றார். உண்மை என்னவென்றால், பிரான்ஸ் அதிபர் பிரான்ஸில் பெரும் குழப்பத்தில் இருக்கிறார். அதிலிருந்து தனது மக்களைத் திசை திருப்பவே அவர் இத்தகைய புதிய பயணங்களை நிகழ்த்தினார்.

'தி கார்டியன்' பத்திரிகையின் செய்தியைப் பார்க்கும்போது இது தெளிவாகிறது. ''இரண்டாம் உலகப் பெரும் போரின் நினைவை பிரான்ஸ் கடைப்பிடித்தபோது, அதிபர் மாளிகையான எலிசேயில் பிரான்ஸ் அதிபர் இரும்புப் பாதுகாப்புத் தடைகளுக்குப் பின்னால் அதிபர் மக்ரோன் தனித்திருந்தார். அந்த நிகழ்வுகளுக்கு ஒரு பொதுமகன் கூட அனுமதிக்கப்படவில்லை. அதிபருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், முழக்கங்களைத் தடுக்க அவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன'' என்கிறது கார்டியன் செய்தி.

உலகப் போரில் ஜெர்மனியின் பிடியிலிருந்து பிரான்ஸ் விடுதலை பெற்ற மே 8 நினைவுநாள் நிகழ்வுகளில் முதல் முறையாக பொதுமக்கள் நிகழ்விடத்தை நெருங்கவிடாமல் பொலிஸார் பெரும் வளையத்திற்குத் தடை விதித்திருந்தனர். மக்ரோன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 ஆண்டுகளின் பின்னர், இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகிய ஒரு வருடத்தின் பின்னர் மக்ரோனைப் பொது இடத்தில் கண்டால் மக்கள் கூச்சலிடவோ, காட்டுக் கத்தல் கத்தவோ, அவமதிக்கவோ செய்யாமல் கடப்பது அரிது.

நமது இளம் ஜனாதிபதியை பிரான்ஸ் மக்கள் ஒரு காலத்தில் நம்பிக்கை ஒளியாகப் பார்த்தார்கள். தீவிர வலதுசாரிகளை தோற்கடித்து, பாரம்பரிய பிளவுகளுக்கு மேலாக உயர்ந்த அரசியல் வடிவத்தை உடையவராக மதித்தார்கள். ஆனால் இன்று அவர் வெறுக்கப்படுகிறார். மக்கள் அவரைப் போற்ற மறுக்கிறார்கள். அரச ஓய்வூதிய வயதை 62இல் இருந்து 64 ஆக உயர்த்தும் மக்ரோனின் முடிவு, பெரும் எதிர்ப்பின் மத்தியிலும், நாடு முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவு கோபத்தை உருவாக்கியுள்ளது - அவற்றில் பெரும்பாலானவை ஜனாதிபதியையே நோக்கியவை.

ஒரு பிரெஞ்சு ஜனாதிபதி மக்களின் கோபத்திற்கு முகம்கொடுப்பது இது முதல் முறையல்ல: நிக்கோலஸ் சார்க்கோசி, பிரான்சுவா ஹாலண்ட் மற்றும் ஜாக் சிராக் ஆகியோரும் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டனர். ஆனால் இவ்வளவு மோசமான அவமானத்தை, மரியாதைக் குறைவை இதுவரை யாரும் அனுபவித்ததில்லை. இன்று பிரான்ஸில் 70 வீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் மக்ரோனை ஏற்கவில்லை, சமீபத்திய எதிர்ப்புகளில் அது வெளிப்படையாகத் தெரிந்தது.

மக்ரோன் மீது மக்கள் இவ்வளவு வெறுப்புணர்வை உமிழ்வதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது முக்கியம். உணர்வின் வலிமை சமமற்றதாகவோ அல்லது நியாயமற்றதாகவோ இல்லை. 2017 இல் மக் ரோனின் தேர்தல் பரப்புரையின் முக்கிய முழக்கம் என்னவென்றால், பிரான்சுக்கு வியாழன் போன்ற அரச தலைவர் தேவை, வியாழன் ஒரு கடவுள் மட்டுமல்ல, கடவுள்களின் ராஜா.

பதவியில், அவர் மேலிருந்து கீழாகவும் அதிக சுயநலமாகவும் அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தினார். இதனால் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் தனிப்பட்ட முறையில் அவரே பொறுப்பேற்க வேண்டும் என்ற உள்ளுணர்வினால் மக்கள் உந்தப்படுகின்றனர்.



மக்ரோனுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை, எனவே அரசமைப்பு விதிவிலக்குகளை செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே அவரால் ஓய்வூதியச் சட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்த முடிந்தது. நாடாளுமன்ற வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சட்டங்களை இயற்ற அனுமதிக்கும் பிரிவு 49.3ஐப் பயன்படுத்தினார் மக்ரோன். இதனைத் எதிர்த்து தெருவில் இறங்கிய மில்லியன் கணக்கான மக்களை எதிர்ப்பது ஒரு ஆத்திரமூட்டலாக விளங்கும் என்று அவர் ஆச்சரியப்பட்டிருக்க முடியாது” - என்று கார்டியன் தெரிவித்துள்ளது.

பிரெஞ்சு ஜனாதிபதி தனது குழப்பத்தை அவிழ்க்க ஒரு சர்வதேச பாத்திரத்தை தேடுகிறார். ரணில் இலங்கையில் பிழைப்பதற்காக சர்வதேச உறவுகளை விற்கிறார். சந்திரிகா குமாரதுங்க பிரான்ஸ் நாட்டு தலைவர்களுடன் நெருக்கமாக பழகிய இலங்கை தலைவர். அவரது உத்தியோக பூர்வ பதவிக் காலத்தில், அவர் மூன்று முறை பிரான்ஸ் சென்று பிரெஞ்சு ஜனாதிபதியை அவர்களின் அழைப்பின் பேரில் சந்தித்தார்.

2005 இல் அவரது வருகையின்போது பிரான்ஸ் அவருக்கு அன்பான வரவேற்பை வழங்கியது. இப்படிப் பார்க்கும்போது, மக்ரோனின் இலங்கை வருகை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் தெரியவில்லை.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கேரளாவில் விருது பெறும் இலங்கையின் குறும்படம்!







இந்த வருடம் பதினைந்தாவது International Documentary & Short Film Festival of Keralas, ஐம்பத்தி மூன்று குறும்படங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் அமெரிக்கா, ஈரான், சீனா, இஸ்ரேல், ஹங்கேரி, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் சிலநாடுகளின்படங்களுடன், இலங்கை சார்பாக எல்லையற்று விரிகிறதோர் இரவு தெரிவாகியுள்ளது.

இக் குறும்படத்தை முல்லைத் தீவு, முள்ளியவளையில் வசிக்கும் வேல்ராஜா சோபன் என்பவர் எழுதி தயாரித்து இயக்கியுள்ளார். இந்த குறும்படம் சிறிய பொருட்செலவுடன், நண்பர்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் எடுக்கபட்டது. வெள்ளிக்கிழமை கேரளாவில் உள்ள KAIRALI SREE NILA திரையங்கில், காலை 11 மணிக்கு International Documentary & Short Film Festival of Kerala சார்பில் திரையிடப்பட்டது.

இந்த குறும்படம் வேலை முடிந்து இரவில் கணவனுக்காக வீதியில் காத்திருக்கும் ஒரு பெண்ணுக்கு நடக்கும் உளரீதியான பாலியல் துன்புறுத்தல் (Mental Rape) பற்றியது.

இந்த குறும்படத்தில் இராசையா லோகாநந்தன், செல்வராஜ் லீலாவதி மற்றும் ஜெனோன் ஜெயரட்ணம் முதன்மை காதாபாத்திரங்களாக நடித்து இருக்கிறார்கள். ரிஷி செல்வம் ஒளிப்பதிவு செய்துள்ளார். படத்தொகுப்பு மற்றும் உதவி ஒளிப்பதிவாளராக திலீப் லோகநாதனும், உதவி இயக்குனர் மற்றும் Co -Writerறாக புவனேஷ்வரன் பிரஷாந்த என்பவரும், இரண்டாவது உதவி இயக்குனாராக Rj பெனயா என்பவரும், கள உதவியாளராக காந்தரூபன் மற்றும் கிரிஷாந் என்பவரும், Foley & Sound Mix புவனேந்திரன் பிரணவனும் கள ஒலிப்பதிவை வாகீசனும் செய்திருக்கிறார்கள். (05)

## இஸ்லாமிய அமைப்புகள் மீதான தடைநீக்கம் மீளவும் ஆராயோம்

### என்கின்றார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கம் குறித்து மீளஆராயப்போவதில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலை தொடர்ந்து ஐந்து இஸ்லாமிய அமைப்புகளுக்குஎதிராக விதிக்கப்பட்ட தடையை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நீக்கியுள்ளார்.

எனினும் கத்தோலிக்க திருச்சபைஅரசாங்கநாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதனைக்கண்டித்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில் தடைநீக்கப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யுமா என்ற மோர்னிங்கின் கேள்விக்கு பதிலளித்துள்ள பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர், தற்போதைக்கு இது குறித்து மீள்பரிசீலனை செய்யும் திட்டம் எதுவுமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்புடன் தொடர்புபட்டவர்களும் இணைந்து தடைகளை நீக்கும் முடிவை எடுத்தனர் எனத் தெரிவித்துள்ள அவர், விமர்சனங்கள் உள்ளதை நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம். எனினும் இதனைத் தீவிரமாக ஆராய்ந்த பின்னரேசெய்துள்ளோம். அரசியல்வாதிகள்எவரும் இதில் தொடர்புபடவில்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இது குறித்து நாங்கள் மீள்பரிசீலனை செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகளை உரிய அமைப்புகள் தொடர்ந்தும் கண்காணிக்கும் எனவும் பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புதொடரும் அவர்கள் பிழை செய்தால் தடை மீண்டும் நடைமுறைக்கு வரும்எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

## பிரதமரின் கூட்டத்தில் அதிதிகளின் ஆசனத்தை தவிர்த்த சாணக்கியன்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரதமரின் வருகையை முன்னிட்டு நடந்த கூட்டத்தில் மக்களின் சார்பாக மக்களில்ஒருவனாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பங்குபற்றி இருந்தார்கள்.

அதில் அரசு மற்றும் அரசுசார்ந்த நாடாளுமன்றஉறுப்பினர்கள்அமைச்சர்கள், அரசு சார்ந்து திரைமறைவில் செயற்படும் நாடாளுமன்றஉறுப்பினர்கள் எமது மக்களின் உரிமை மற்றும்மக்கள்நலன்சார்ந்த கோரிக்கைகளை, அரசு சார்ந்தவர்களின் ஊழல்களை, மக்களுக்கான அநீதிகளை கண்டுகொள்ளாது உதாசீனப்படுத்தும் விதமாக நடந்து கொள்கின்றனர் அதன் காரணமாகவே அவர் பிரதமரின் கூட்டத்தில் அரச அதிதிகளின் வரிசையில் அமராமல் மக்களோடு மக்களாக பங்குபற்றியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் அரச சார் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊழல்கள் பற்றிய ஆவணத்தையும் பிரதமரிடம் சாணக்கியன் சமர்ப்பித்திருந்தார். அதன்போது பிரதமர் இவ் ஊழல்கள்தொடர்பானஊழல் மோசடி விசாரணைக் குழு ஒன்றைஅமைப்பதாகஉறுதியளித்திருந்தார்.

இந்த ஊழல்கள் மக்களுக்கு எதிராகச் செயற்படும் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து இவர்களின் வருகைகளை ஒட்டி எமது மக்களுடன் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டங்ள் முன்னெடுக்கப்படும் என்பதனையும் அவர் மேலும் வலியுறுத்தியிருந்தார். (05)

## அரச நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் மாத்திரமே உள்ளதாம்



கடன் மறுசீரமைப்பு விடயத்தில் நாடாளுமன்றம் தவிர்ந்த எந்தவொரு தரப்பினதும் பரிந்துரைகளை அரசாங்கம் கருத்திற் கொள்ளாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தெங்கு உற்பத்தியாளர்களின் மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் மட்டுமே இருப்பதால், கடன் மறுசீரமைப்பு விடயத்தில் நாடாளுமன்றம் தவிர்ந்த எந்தவொரு தரப்பினதும் பரிந்துரைகளையும் அரசாங்கம் கருத்திற் கொள்ளாது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (05)

## இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்க பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்பு!












இலங்கை தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் 29 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை கொழும்பு 7 இல்அமைந்துள்ளஇலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

அத்தோடு, அவர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## வயலில் வேலை செய்த பெண்ணை தாக்கிக் கொன்றது காட்டு யானை!

வயலில் வேலை செய்துகொண்டிருந்த பெண்ணொருவரை காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். புத்தல, கொங்கெட்டிய பகுதியில் வயல் ஒன்றில் வேலை செய்த 63 வயதுடைய பெண்ணே இவ்வாறு காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

யானை வருவதாக ஊர்மக்கள் கூச்சலிட்ட போதும் உயிரிழந்த பெண்ணுக்கு செவிப்புலனற்ற குறைபாடு இருந்த காரணத்தால் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவதுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 6th August 2023

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

Name :______________________

Read the story then answer the questions.

## Jan's New Bike



Jan has a new bike. Her new bike is red. It has an orange flag on the back. Jan can ride her bike fast. She rides her bike after school. She goes to Allison's house and then she goes back home.

### Questions

1 . What does Jan have ?

------------------------------------------

2. What color is Jan's new bike?

------------------------------------------

3. What is on the back of the bike?

------------------------------------------

4. When does Jan ride her bike?

------------------------------------------

5. Where does Jan go on her bike?

------------------------------------------

Read the following passage and answer the questions :



It is a cow. It is black and white. It says moooo! It likes to eat grass. We like to drink its milk. We can eat its meat. It has two horns on its head. It lives on a farm.

### Questions

1 - What is this animal ?

------------------------------------------

2 - Where does milk come from ?

------------------------------------------

3 - What sound does a cow make ?

------------------------------------------

4 - Where does a cow live ?

------------------------------------------

Read the following passage and answer the questions :



This is a chicken. It lives on the farm. It gives us eggs for breakfast. It can be brown, white and yellow. It can run but not fly. It says cluck cluck

### Questions

1 - What is this animal ?

------------------------------------------

2 - Where do eggs come from ?

------------------------------------------

3 - What sound does a chicken make ?

------------------------------------------

4 - Where does a chicken live ?

------------------------------------------

Read the following passage and answer the questions :



These are bears. They live in the forest. They are brown. They are big and have sharp claws. They like to eat berries and meat. In winter they can sleep for months.

### Questions

1 - What do bears like to eat ?

------------------------------------------

2 - When do they sleep for months ?

------------------------------------------

3 - Where do these bears live?

------------------------------------------

4 - What color are they ?

------------------------------------------

Read the following passage and answer the questions :



This is a sheep. It loves to run and jump. It is black and white. It gives us wool to wear. It likes to eat grass. A baby sheep is called a lamb. It says baaaaaaa.

## Questions

1 - What is this animal ?

2 - What does it love to do ?

3 - What sound does a sheep make ?

4 - What color is the sheep ?

Read the following passage and answer the questions :



These are rabbits. They like to hop and dig. They live in fields and forests. They dig holes to live in called burrows. They like to eat grass and vegetables. They are small.

## Questions

1 - What do rabbits like to do ?

2 - What do they like to eat ?

3 - Where do they live ?

4 - Are rabbits big or small ?

Name :____________________

Read the story then answer the questions.

## The Apple Pie



Mother and I baked a pie. We baked an apple pie. I do not like blueberry pie. First, we made the pie crust. Then we put the filling in the crust. Next, we baked the pie for 30 minutes. After dinner, we ate the pie for dessert.

## Questions

1 . Who baked a pie ?

2. What kind of pie did we bake ?

3. What kind of pie don't I like ?

4. What did Mother and I do first ?

5. How long did we bake the pie ?

Read the following passage and answer the questions :



This is a monkey. It is a small animal. It likes to eat fruit and nuts. They are omnivores. Monkeys have two legs, two legs and a tail. They are brown. They can climb and swing from trees.

## Questions

1 - What animal is this ?

2 - What does it like to eat ?

3 - How many legs do monkeys have?

4 - What can they do ?

# Bharatanatyam



Bharatanatyam is an Indian classical dance form that originated in Tamil Nadu. It is one of eight Indian classical dance forms recognized by the Sangeet Natak Akademi, and expresses South Indian religious themes and spiritual ideas, particularly of Shaivism and in general of Hinduism. A description of precursors of Bharatanatyam from the 2nd century CE can be found in the ancient Tamil epic Silappatikaram, while temple sculptures of the 6th to 9th century CE suggest dance was a refined performance art by the mid-1st millennium CE. Sadiraattam, which was renamed Bharatanatyam in 1932, is the oldest classical dance tradition in India.Bharatanatyam is the state dance form of Tamil Nadu.

Bharatanatyam contains different types of banis. Bani, or "tradition", is a term used to describe the dance technique and style specific to a guru or school, often named for the village of the guru. Bharatanatyam style is noted for its fixed upper torso, bent legs and knees flexed (Araimandi) combined with footwork, and a vocabulary of sign language based on gestures of hands, eyes, and face muscles.The dance is accompanied by music and a singer, and typically the dancer's guru is present as the nattuvanar or director-conductor of the performance and art. The performance repertoire of Bharatanatyam, like other classical dances, includes nrita (pure dance), nritya (solo expressive dance) and natya (group dramatic dance).

Sadiraattam remained exclusive to Hindu temples through the 19th century.It was banned by the colonial British government in 1910,but the Indian community protested against the ban and expanded its performance outside temples in the 20th century as Bharatanatyam Modern stage productions of Bharatanatyam have become popular throughout India and include performances that are purely dance-based on non-religious ideas and fusion themes.The Thanjavur Quartet developed the basic structure of modern Bharatanatyam by formalizing it.





**Fact finding**

Read the non-fiction text about whales.

Cut out the question cards on page 2 and put them in a pile, face down. Pick one card at a time and see how much you can remember from the text.

**Whale watch**


Whales are mammals. Mammals are animals whose young drink milk from their mothers. A baby whale is called a calf.

There are lots of different species of whales but only two different types. These are baleen whales and toothed whales. Baleen whales feed on krill and plankton and toothed whales eat fish such as tuna, cod and salmon.

Whales breathe air so they regularly have to come to the surface. They breathe in air through their blowholes. Sperm whales can stay under water for as long as 90 minutes before they have to breathe in air again.

Whales communicate with each other by singing. Sperm whales have the loudest song. Beluga whales make chirping sounds.

The blue whale is the largest animal in the world.




What is a baby whale called?

Can you name the two different types of whale?


What do baleen whales eat?

How do whales breathe in air?

How do whales communicate with each other?

Which whale has the loudest song?

What is the largest animal in the world?



# ‘வேர்களை மீட்டு உரிமை வென்றிட’ பவனி மிகிந்தலையை அடைந்தது



மலையக மக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு தலைமன்னாரிலிருந்து மாத்தளை நோக்கி மேற்கொள்ளப்படும் நடைபவனி, நேற்றைய தினம் மிகிந்தலை வரை இடம்பெறவுள்ளது.

வவுனியா - செட்டிக்குளம் பகுதியிலிருந்து நேற்றுக் காலை ஆரம்பமான இந்த நடைபயணம் நேற்று மதியம் மதவாச்சியை சென்றடைந்தது.

அதேநேரம் தலைமன்னாரிலிருந்து மாத்தளை நோக்கி மேற்கொள்ளப்படும் நடைபயணத்திற்கு ஆதரவு தெரிவித்து புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி நேற்றைய தினம் மதவாச்சியை சென்றடைந்தது.

‘வேர்களை மீட்டு உரிமை வென்றிட’ எனும் தொனிப்பொருளில் ’முன்னெடுக்கப்படும் மலையகம் 200’ எனும் குறித்த நடை பவணி நேற்று ஒன்பதாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ்ஸில் கற்பித்தல் வெண்பலகை அறிமுகம்



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (ஜீ.எம்.எம்.எஸ்) பெற்றோர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட இலகு கற்பித்தல் வெண்பலகை அறிமுகமும், பாடசாலை குறுஞ்செய்திச் சேவை அங்குராா்பணமும், ஆசிரியர் கையேடு அறிமுகமும் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இலகு கற்பித்தல் வெண்பலகையை அறிமுகம் செய்து வைத்ததுடன் பாடசாலை குறுஞ்செய்தி சேவையையும் தொடங்கி வைத்தார்.

மேலும் ஆசிரியர் கையேடுகளையும் அறிமுகம் செய்து வைத்து மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் ஆசிரியர்களிடம் கேட்டறிந்து மேலதிக ஆலோசனைகளையும் வழங்கி வைத்தார். மாணவர்களுக்கு கற்பித்தலில் ஈடுபட்ட வலயக் கல்விப்பணிப்பாளர் மாணவர்களுடன் சிநேகபூர்வ உரையாடல்களை மேற்கொண்டு கல்வி நடவடிக்கைகளின் மேம்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை வலய உதவிக் கல்விப்பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக், பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எந்திரி எம்.ஐ.எம். றியாஸ் அடங்களாக உறுப்பினர்கள், தொழிலதிபர் எம்.ஜே.எம். காலீத் உட்பட பிரதியதிபர், ஆசிரியர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)



# வைத்தியசாலைக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கல்





அட்டாளைச்சேன தள ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு, வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் குறித்த வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர். ஸ்ரீதரிடம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலகளின் இணைப்பாளரும், வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஐ.எல்.அப்துல் ஹை ஆகியோருடன், காணி உத்தியோகத்தர் எம்.எம். றியாத், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.ஜே.தேவநாத் உள்ளிட்ட பலர் கலந்துசிறப்பித்திருந்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பாக்கு நீரிணையைக் கடக்க சிறார்களுக்கு நீச்சல் பயிற்சி

## மரைன் மைல் சலஞ்ச் கிழக்கில்



யானா நீச்சல் அக்கடமியில் பயிற்சிபெற்று வருகின்ற 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான நீச்சல் பயிற்சிப் போட்டியொன்று 'மரைன் மைல் சலஞ்' எனும்தொனிப்பொருளில்பாக்குநீரிணை கடப்பதற்கான இரண்டாவது நீச்சல்பயிற்சிப் போட்டியை கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

14 கிலோமீற்றர் தூரத்தை நீந்திக் கடக்கும் இப்போட்டி, காலை 8.30 மணிக்கு திருகோணமலை வைத்தியசாலையை அண்மித்த கடற்கரையில் ஆரம்பமாகி மதியம் 1.00 மணியளவில் திருகோணமலை சல்லிமுனை கடற்கரையில் நிறைவடைந்தது.

13 சிறுவர்கள் பங்குபற்றிய இப் போட்டியில், 6 சிறுவர்கள் முழுமையாக கடந்துசாதனைபடைத்தனர். சிலர்தங்களால் நீந்த முடிந்த தூரத்தை அடைந்து தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்தனர்.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி.மதனவாசன் பிரதம அதிதியாகவும், டிரின்கோ உதவிநிறுவனத்தின்நிறுவுநர்இராஜக்கோன் ஹரிகரன், பணிப்பாளர் திருமதி தயாளினி ஹரிகரன், நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம்நவநீதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு, இந்தப் போட்டியில் பங்குபற்றிய வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி.மதனவாசன் தெரிவிக்கையில் -

எமது நாடு கடலால் சூழப்பட்டதொரு தீவாகும். ஆனால் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எமது பிள்ளைகள் இத்துறையிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற போட்டிகள் மற்றும் பயிற்சிகளை தொடர்ந்தும் வழங்கி அவர்களை ஊக்கிவித்தும் வருகிறோம்.



அதுமாத்திரமல்லாமல், எமது நாட்டிலுள்ள எல்லா மாகாணங்களை விடவும், எமது மாகாணம் சகல வழிகளிலும் இயற்கை வளமுள்ள பசுமையான மாகாணமாக இருக்கின்றது. அதைசரியாகப் பயன்படுத்தினால் எமது பிள்ளைகள் எதிர்வரும் காலங்களில் பல அடைவுகளை அடைந்து, பல சாதனைகளை நிலை நாட்டுவதுடன், மிக அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கச் செய்து எமது நாட்டுக்கு அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கின்ற மாகாணமாகவும் இருக்கின்றது.

அதற்கான பல திட்டங்களைத் திட்டமிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆலோசனை மற்றும் உதவியின் கீழ் முன்னெடுத்தும் வருகின்றோம். - என்றார்.(05)

# காங்கேசன் ஆலை இரும்பு திருட்டு 8 பெண்கள் உட்பட 20 பேர் கைதாம்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இருந்து இரும்புகளைத் திருடிய குற்றச்சாட்டில் 8 பெண்கள் உட்பட20பேரைப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறைபொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த சீமெந்து தொழிற்சாலைக்குள்அத்துமீறி நுழைந்த 20 பேர் கொண்ட கும்பல் அங்கு திருட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அங்கு விரைந்து சென்றபொலிஸார்அவர்களை அனைவரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களைபொலிஸ் நிலையத்தில்தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பிரதேச வாசிகள் இரும்பு திருட்டில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் , கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 120 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய இரும்புக்கள் திருடப்பட்டுள்ளன எனவும் சீமெந்து கூட்டுத்தாபனத்தின்தலைவர் ஜகத் தர்மபிரிய அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 13 குறித்த ஆளும் தரப்பின் நிலைப்பாடுதான் என்ன?

## முதலில் அதைப் பகிரங்கப்படுத்த அனுர வலியுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்பொழுது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கானநாடகத்தையேஅனைத்துக் கட்சிக் கூட்டம் என்ற பெயரில் நடத்துகின்றார் என்று குற்றச்சாட்டியுள்ளார் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க.

இதற்குநாம்துணைபோகமுடியாது. 13ஆவது திருத்த சட்டம் சம்பந்தமாக ஆளும் தரப்புத் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தினால் அது சம்பந்தமான பரிந்துரைகளைச் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 15 ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும்தமதுகட்சிபுறக்கணிக்கும் என்று தெரிவித்த அவர், ஜனாதிபதி வழங்கியுள்ள காலக் கெடுவுக்குள் தமது கட்சி எந்த முன்மொழிவுகளையும் வழங்காது என்றும் கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தியே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறார்.

அதன்ஒருஅங்கமாகவேஅனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்கப் போவதாகவும் அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவையும் கோருவதாகவும்தெரிவிக்கின்றார். அதற்காகவே 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக அரசியல் கட்சிகளின் யோசனைகளை அவர் தற்போது கோருகினறார்.

ஆனால் ஆளும் தரப்பு இந்த விடயத்தில் என்ன நிலைபாட்டை கொண்டிருக்கின்றது என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆளும் தரப்புக்குள் இந்த விடயம் சம்பந்தமாக முரண்பாடான நிலைமைகள் இருக்கின்றன. அது பகிரங்கமான விடயம்.

அவ்வாறிருக்கையில் எதிர்க்கட்சிகளிடமே ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் கடன்மறு சீரமைப்பு, நாட்டின்வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தல் போன்ற விவகாரங்களில் ஆளும் தரப்பாலேயே தீர்மானம் எடுக்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சிகளிடம் கருத்துக்களை கோரவில்லை.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் மாத்திரம் எதற்காக ஆளும் தரப்பின் முடிவை அறிவிக்காது எதிர்கட்சிகளின் நிலைப்பாட்டை கோருகின்றார் என்பதே இங்குள்ள முக்கிய கேள்வியாகும்.

எம்மை பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக ஆளும் தரப்புத் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்துகின்றபொழுதுநாம்எமது பரிந்துரைகளையும் கருத்துகளையும் முன்வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அதனை விடுத்து ஜனாதிபதியின் ஏமாற்று நாடகங்களுக்கு நாம் துணை போகப் போவதில்லை - என்றார்.

# செங்கலடி சந்தியில் மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிகள்



வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்குடன் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க செங்கலடி சந்தியானது அகலப்படுத்தப்பட்டு மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணிகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று துரிதமாகஇந்தசெயற்பாட்டை செய்து முடித்த கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனுக்கு மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்த வீதியானது அதிக சன நடமாட்டம் கொண்ட வீதியாகவும், கடந்த காலங்களில் மிக நெருக்கமாகவும் , போக்குவரத்து செய்வதில் சிரமமாகவும், அன்றாடம் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் இடைஞ்சலாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இடத்திற்கு மேற்பார்வை கள விஜயம் ஒன்றைத் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் நவரத்தினம் திருநாவுக்கரசு (அருண்) செங்கலடி தமிழ் வர்த்தக சங்க தலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஏறாவூர் பற்று அமைப்பாளருமான சுப்பிரமணியம் ராஜேந்திரனும்மேற்கொண்டிருந்தனர். (05)



# ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனித்திருந்த நிலையில் அடித்துக் கொலை

## கந்தானையில் சம்பவம்

தனிமையில் வாழ்ந்து வந்த ஓய்வுபெற்ற உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சொந்த வீட்டிலேயே அவரது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் தலையில் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார் என கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை வெலிகம்பிட்டிய கந்தவத்தையைச்சேர்ந்த84வயதுடைய ஓய்வுபெற்றபொலிஸ்உத்தியோகத்தரான கங்காதரன் சங்கரன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



உயிரிழந்தவரின் பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என்றும் அவரது மனைவி உயிரிழந்ததால் இவர் வீட்டில் தனியாக வசித்து வந்தவர் என்ப தும் விசாரணையில் தெரியவந்தது.

இவரது உடல் வீட்டின் சமையலறையில் கை, கால்கள் கட்டப்பட்டு தரையில் வீசப்பட்ட நிலையில் பாதி அழுகிய நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தொடர்பில்இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

# குற்றச் செயல்களை தடுக்கும் வகையில் விசேடகுழு நியமனம்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக விசேடகுழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தலைமையில் இந்த விசேட குழு நியமிக்கப்படவுள்ளது. (05)



# சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் 'இசை அர்ச்சனை' நிகழ்வு

அருள்மிகு சம்மாங்கோடுஸ்ரீமாணிக்கவிநாயகர் ஆலயத்தில் 01.08.2023 அன்று'இசைஅர்ச்சனை'குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'ஆடிவேல் இசை நிகழ்ச்சி' பிரம்மஸ்ரீ ஏ.ஜி.எஸ். சுவாமிநாதன் சர்மா, அரவிந்தன் சுப்ரமணியம் சர்மா, அனந்த நாராயணன் சர்மா, வாசுகி சுவாமிநாதன் சர்மா, நந்தினி சுவாமிநாதன் சர்மா ஆகியோரின்பங்குபற்றலுடன் இனிதே இடம் பெற்றது. (05)

# மோட்டார் சைக்கிள் வரணியில் விபத்து

## இருவர் படுகாயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி, கறுக்காய் பகுதியில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்றவிபத்தில்இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில்நடந்துசென்ற வயோதிபர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2023இல் வெளியிடப்பெற்றது.